# தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை 2023

NASTEC

## நன்றி நவிலல்

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயல்பாடுகளுக்கு ஆதரவை வழங்கிய கல்வி அமைச்சிற்கு (ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு) முகாமைத்துவம் தனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறது. அது போன்று தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் பதவியணியினரால் வழங்கப்பட்ட சிறந்த ஒத்துழைப்பு மற்றும் உதவிக்காகத் தலைவர் மற்றும் ஆணைய உறுப்பினர்கள் தமது நன்றியினை பதவியணியினருக்கு தெரிவிக்க விரும்புகின்றனர்.

## தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவினை பற்றி

இலங்கை அரசாங்கத்திற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கருமங்கள் மீதான உச்ச மட்ட கொள்கைகளினை முறைவடிவமாக்கம் செய்வதுடன் ஆலோசனை வழங்குகின்ற அமைப்பாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு. பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆணைகுழுவானது, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களால் ஆக்கப்பட்டுள்ளது.

### அமைவிட முகவரி

6 ஆம் மாடி, தொகுதி D, ‘‘செத்சிறிபாய’’ கட்டம் II, பத்தரமுல்ல

### தொடர்பு கொள்வதற்கான தகவல்கள்

011- 2186711

011- 2186713

info@nastec.gov.lk

www.nastec.gov.lk

இலங்கை வங்கி - ஹய்ட் பார்க்

கணக்காய்வாளர் நாயக திணைக்களம்

## உள்ளடக்க அட்டவணை


**நன்றி நவிலல்....................................................................................................................................... 2**

**தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவினை பற்றி ........................................................................... 3**

**விஞ்ஞான தொழில்நுட்ப சட்டத்தின் (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத்தினை கொண்டது). ஊடாக பொறுப்பளிக்கப்பட்ட தொழிற்பாடுகள் ............................................................................................................ 6**

**தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணிப்பாணை 7**

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றிய சுய விவரக்குறிப்புக்கள் ........................................ 8**

**நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு........................................................................................................................ 9**

**தலைவரின் மீளாய்வு ...................................................................................................................................... 10**

**பணிப்பாளரின் அறிக்கை ................................................................................................................................. 11**

**ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் .................................................................................................................... 13**

**திறைசேரி பிரதிநிதி ........................................................................................................................................ 14**

**தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பதவியணியினர் – 2023........................................................ 16**

**செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் - 2023.......................................................................................................... 17**

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (1): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்17*

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (2): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளினை இலங்கையில் மீள் நோக்கி அது தொடர்பில் வருடாந்தம் அரசுக்கு ஒரு அறிக்கையினை சமர்ப்பித்தல்.............................................................................................. 17*

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தினை மீளாய்தல் ................................................................................ 18*

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயல்பாடு (4): அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கலந்தாலோசித்தல். ................................ 21*

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (5): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஈராண்டுக்கொருமுறையான மாநாட்டைக் கூட்டுதல் (BICOST)............................. 28*

**சர்வதேச விவகாரங்கள்.................................................................................................................................... 29**

*பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (BIMSTEC): இராஜதந்திரத்தில் கொள்கைக்கான விஞ்ஞானம். ...................................................... 29*

*அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையம் (NAM S&T மையம்) ......................................................................................................................... 30*

**மனிதவள முகாமைத்துவம்................................................................................................................................ 33**

**பதவி நிலை உத்தியோகத்தர்கர்கள் பற்றிய செய்திகள் ....................................................................................... 33**

**நலன்புரி சங்கத்தின் செயற்பாடுகள்.................................................................................................................. 33**

**கூட்டுறவு ஆளுகை அறிக்கை ............................................................................................................................. 34**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை ............................................................................................ 35**

**நிதியியல் கூற்றுக்கள்......................................................................................................................................... 36**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ................................................................................................ 38**

**கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் (2014-2023) .................................................. 43**

## உருக்களின் அட்டவணை

*உரு 1 சட்டமும் சட்டவாக்கமும், நோக்கு மற்றும் பணி* ........ 6
*உரு 2 நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு* ........ 9
*உரு 3: விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைப்பாடு பற்றிய அறிக்கை 2019-2020* ........ 18
*உரு 4 நிறுவன ரீதியிலான மீளாய்வு அறிக்கைகளின் வெற்றியாளர்கள்* ........ 19
*உரு 6: ஒரு மரபணு முதல் மரபணுக்கள் தொகுதி வரை: தாவர நோய்க்கிருமி பூஞ்சைகளைப் ஆய்வு செய்ய DNA வரிசைத் தரவைப் பயன்படுத்துவதன் நன்மைகள்* ........ 24
*இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்* ........ 24
*உரு 7: பட்டதாரிகள் பாடசாலைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு சிறப்பாக எழுதுவது* ........ 24
*இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்* ........ 24
*உரு 8: கல்வியியலாளர்களின் வெளியீட்டு பரப்பெல்லை, இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்* ........ 25
*உரு 9: இலங்கையில் இரத்தினக்கல் தொழில் தொடர்பான பட்டறை* ........ 26
*உரு 10: இளம் விஞ்ஞானிகள் மன்ற கருப்பொருளுக்கான மின் பதிப்பு – இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்துவதற்கான பல்துறை அணுகுமுறைகள்* ........ 27
*உரு 11: விருதினை வெற்றி கொண்ட இளம் விஞ்ஞானிகள்* ........ 28
*உரு 12: BICOST IX தொழில்நுட்ப வெளியீடுகள்* ........ 29
*உரு13 : வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) முன்முயற்சிக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த முதல் நிபுணர் சந்திப்பு* ........ 29
*உரு14: : வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) முன்முயற்சிக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த இரண்டாவது நிபுணர் சந்திப்பு* ........ 30
*உரு 15 : அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 16வது ஆளும் குழு* ........ 31
*உரு16 : நிதிக்கூற்றுக்கள்* ........ 37

## அட்டவணைகளின் பட்டியல்

உரு 17- **கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள்** (2014-2023).. 43

## விஞ்ஞான தொழில்நுட்ப சட்டத்தின் (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத்தினை கொண்டது). ஊடாக பொறுப்பளிக்கப்பட்ட தொழிற்பாடுகள்

**சட்டமும் சட்டவாக்கமும்**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 1994 ஆம் ஆண்டின் 11 இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் ஊடாக தாபிக்கப்பட்டு 1998 ஆகஸ்ட் மாதம் தொழிற்பட தொடங்கியது. இது 1998 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று முறையாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 1999 சனவரியில் அதனது தொழிற்பாட்டினை தொடங்கியது

**நோக்கு**

"இலங்கை மக்களின் நல் வாழ்வினையும் சுபீட்சத்தினையும் மேம்படுத்துவதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் வாய்ப்பு மற்றும் பயன்பாடு பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்ற உன்னதமான நிறுவனமாக திகழ்தல்."

"

**பணி**

"நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பிரயோகத்திற்கென விஞ்ஞானத்திலும் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலவுகளினை கட்டியெழுப்புவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்திற்கு கொள்கைகளினை உபாயங்களினை மற்றும் திட்டங்களினை வகுத்தல்."

*உரு 1 சட்டமும் சட்டவாக்கமும், நோக்கு மற்றும் பணி*

## தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணிப்பாணை

பின்வரும் விடயங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்கல்::

- பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தல்;
- கைத்தொழிற்றுறை, விவசாயம், சேவைகள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் திறன் மற்றும் போட்டித்தன்மையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, சுகாதாரம், போசணை மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;
- கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கு தேவையான மனித மற்றும் பிற வளங்களை மேம்படுத்துதல்;
- இலங்கையின் இயற்கை வளங்களினை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பரப்பெல்லைகளில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளினை அடையாளம் காணலும் அவற்றிக்கு முன்னுரிமை வழங்களும்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் உருவாக்கம், தக்கவைப்பு மற்றும் ஈர்ப்புக்கு உகந்த சுற்றுச்சூழலினை உருவாக்குதல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உற்பத்தி திறன் மிகு பயன்பாட்டிற்கு உகந்த முகாமைத்துவ உத்திகளை நிறுவுதல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிதியுதவி செய்தலுக்கு முன்னுரிமை அளித்தல் உள்ளடங்கலாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதி ஒதுக்கீடு;

முன்னைய ஆண்டில் இலங்கையில் இடம் பெற்ற விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப செயற்பாடுகளும் மனித வள அபிவிருத்தி தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைளின் பயனுறுதியும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பங்களின் மீது அரசினால் மேற்கொள்ளப்படும் செலவினங்களின் பயனுறுதி மற்றும் அரசினால் மேற்கொள்ளப்படும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாடு ஆகிய விடயங்களினை மீளாய்வு செய்து, அது பற்றிய அறிக்கையினை வருடாந்தம் அரசிற்கு சமர்ப்பிப்பதற்கு;

விஞ்ஞான தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரணங்களுடன் இணைந்த வகையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கு


அந்த நிறுவனங்களுக்குத் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கலந்தாலோசித்தல்.

அமைச்சரின் முன் அனுமதியுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான மாநாட்டை இலங்கையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டல், அத்துடன் சட்டத்தின் 2வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கலந்துரையாடலுக்கான ஒரு அரங்கை வழங்குதல் மற்றும் அத்தகைய கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்தல்.

## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றிய சுய விவரக்குறிப்புக்கள்

- *தலைவர் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குகின்றார்.*
- *பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார் .*
- *சிரேட்ட விஞ்ஞானிகளும் மற்றும் ஏனைய விஞ்ஞானிகளும் துறைசார் கொள்கைகள், உபாயத்திட்டங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆவணங்கள் போன்றவற்றினை உருவாக்குவதற்கும் தயாரிப்பதற்கும் ஆர்வலர்கள் மற்றும் ஆலோசனை மன்றங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.*
- *நிதி மற்றும் நிர்வாக முகாமைத்துவம் தொடர்பிலான விடயங்கள் பிரதி பணிப்பாளரினால் (நிதி மற்றும் நிர்வாகம்) நெறிப்படுத்துகை செய்யப்படுகிறது.*
- *சட்டத்தினால் பொறுப்பாணையளிக்கப்பட்டவாறு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிறுவன சார் மீளாய்வினை மேற்கொள்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடர்புடைய துறைகளிருந்து நிபுணர்களினை திரட்டுகின்றது.*

## நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு




*உரு 2 நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு*

## தலைவரின் மீளாய்வு

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலான கருமங்கள் பற்றி இலங்கை அரசாங்கத்தின் அதியுயர் கொள்கை ஆலோசனை நிறுவனமாகப் பணியாற்றுகின்ற தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திற்கான அதன் பொறுப்பாணையளிக்கப்பட்ட நடவடிக்கைகளை கொண்டு நடாத்திய மேலும் ஒரு வெற்றிகரமான ஆண்டை நிறைவுசெய்துள்ளது என்பது பற்றி அறிக்கையிடுவது மகிழ்ச்சியை தருகின்றது. ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில் 2023 இற்கான நிறுவனத்தின் அடைவுகளை எடுத்துக்காட்டி, அணியினரின் அயராத முயற்சிக்காக அவர்களுக்கு நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டுக்கான கொள்கை வகுப்புச் செயற்பாடுகளை 2023 இலும் தொடர்ந்தும் முன்னெடுத்து, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மரபணுத்தொகை நிலையங்கள் மற்றும் தேசிய மரபணுத் தொகை தரவு வைப்பகம் மீதான தேசிய கொள்கையை உருவாக்கியுள்ளது. அத்துடன் கொள்கை ஆலோசனையை வழங்குவதன் வாயிலாக இலங்கையின் தேசிய சுதேச மருத்துவ கொள்கையினதும் தேசிய கனிமக் கொள்கையினதும் கொள்கை உருவாக்கச் செயன்முறையினை ஆணைக்குழு வசதிப்படுத்தியிருந்தது. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஈராண்டுக்கொரு முறையான மாநாட்டு 2023 க்கு உரிய பிந்திய கொள்கை வரைவானது, விவசாயம், சக்தி, கனிம பெறுமதி சேர்த்தல், காலநிலை மாற்றம் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் போன்ற முக்கிய விடயங்களை மையப்படுத்தி இருந்ததுடன் இதன் நோக்கு ஆக்கபூர்வமான கொள்கைப் பரிந்துரைகளை வழங்குதல் ஆகும்.

பொறுப்பாணையின் பாகமாக அறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக செயலாற்றுகை மதிப்பீடு. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தரவு சேகரித்தல் ஆலோசனை மன்றங்கள் போன்ற பல வகையான முறைகளை தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு பயன்படுத்தியது. 2023 இல் 03 செயலாற்றுகை மீளாய்வுகள் புதிதாக தொடங்கப்பட்டதுடன் 2019 மற்றும் 2022 இற்கு இடையில் நடாத்தப்பட்ட செயலாற்றுகை மீளாய்வுகளுக்காக தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு 06 நிறுவனசார் அறிக்கைகளை வெளியிட்டது. விசேட ஞாபகார்த்த நிகழ்வாக கடந்த 05 ஆண்டுகளில் (2017- 2021) தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு மூலம் மீளாய்வு செய்யப்பட்ட சிறந்த செயலாற்றுகையைக் கொண்ட நிறுவனங்களுக்கு இரு விருதுகள் வழங்கப்பட்டன. 2019 மற்றும் 2020 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை அறிக்கைகள் வெளியிடப்பட்டு, இலங்கையின் விஞ்ஞான சமூகத்திற்கு பரப்பப்பட்ட அதேவேளை, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தரவு சேகரித்தல் தொடங்கப்பட்டது.

கௌரவ கல்வி அமைச்சரின் ஆசியுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான 9 ஆவது இரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் மாநாடு 2023 மார்ச்சில் இடம்பெற்றது. மாநாட்டின் தொனிப்பொருள் “ காலநிலை மாறுகின்ற இந்த யுகத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நிலையான அபிவிருத்தியினை காணல்” என்பதாக அமைந்திருந்ததுடன் அதன் வெளிவரு விளைவுகள் நாட்டின் முக்கிய விடயங்கள் பற்றிய நான்கு தொழில்நுட்ப அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இளம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி ஆய்வரங்கானது, இணையவழி கருத்தரங்குகள் மற்றும் திறன் அபிவிருத்தி செயலமர்வுகள் உள்ளடங்கலாக பல நிகழ்வுகள் ஊடாக இளம் விஞ்ஞானிகளை திரட்டியது.

சர்வதேச கூட்டுமுயற்சிகளின் பாகமாக 2023 யூன் 21 ஆம் திகதியன்று பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியானது (BIMSTEC), விஞ்ஞானம் தொழில்நுட்பம் பற்றிய அதன் முதலாவது நிபுணர் கூட்டத்தினை நடாத்தியதுடன் BIMSTEC இன் கீழ் ஹிமாலயன் விஞ்ஞான மன்றத்தின் இரண்டாவது நிபுணர் கூட்டம் 2023 யூலை 26 அன்று நடாத்தப்பட்டது. இந்தியாவில் அணிசேரா அமைப்பின் (NAM) விஞ்ஞான தொழில்நுட்ப நிலையத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் சக உறுப்புரிமைகள் நிகழ்வில் இலங்கையிலிருந்து பதினொரு விஞ்ஞானிகள் கலந்தகொள்ள இயலுமாகவிருந்ததுடன் இதற்கு தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு வசதியேற்படுத்திக் கொடுத்தது. தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு ஒருங்கிணைப்பு மையமாக பணியாற்றுகின்ற மொரிசியசில் இடம்பெற்ற அணிசேரா அமைப்பின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் 16 ஆவது ஆளுகைச் சபையில் கல்வியமைச்சின் செயலாளர் பங்கேற்றார்.

இவ் ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில் எமது ஆணைக்குழுவின் தலைமைத்துவம் வழிகாட்டலின் கீழ் எமது நிறுவனம் எவ்வாறு வளர்ச்சியுற்று வெற்றி கண்டுள்ளது என்பதை நான் நேரடியாக அவதானிப்பது சிறப்புரிமையாகும். ஆயினும் அநேகமான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு ஊழியர்களின் அயராத அர்ப்பணிப்பு உரிய கால விதத்தில் வேண்டப்பட்ட பணிகளை நிறைவு செய்வதற்கு அத்தியாவசியமாக விளங்குகின்றது.

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு எதிர்காலத்தில் அதனது அனைத்து செயற்பாடுகளிலும் தொடர்ந்தும் வெற்றியீட்டும் என்பது எனது பேரவாவாகும்.

பேராசிரியர் வெரன்ஞ கருணாரத்தன
தலைவர்
2023 ஆகஸ்ட் 25

## பணிப்பாளரின் அறிக்கை

1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சட்டத்தின் ஏற்பாடுகளை கடைப்பிடித்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு கொள்கை ஆலோசனையையும் உபாயரீதியான வழிகாட்டலையும் வழங்குவதற்கான அதன் பொறுப்பாணையினை தொடர்ச்சியாக நிறைவு செய்துள்ளது. தேசத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தினை ஊக்குவிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பல முன்முயற்சிகளையும் ஆணைக்குழு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளமையால் 2023 ஆம் ஆண்டானது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு மற்றுமொரு மைற்கல்லாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 2022 இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கைகள் மற்றும் உபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து, பல எண்ணிக்கையான முன் முயற்சிகளுக்கான அடிப்படை பணிகளுக்கு அத்திவாரமிட்டது. அவை மரபணுத்தொகுதி நிலையம் மீதான தேசிய கொள்கை, தேசிய மரபணுத்தொகுதி தரவு வைப்பகம், தேசிய சுதேச வைத்தியக் கொள்கை அபிவிருத்திக்கான கொள்கை ஆலோசனை வகிபாகம் அத்துடன் தேசிய கனிமக் கொள்கை என்பனவாகும். கொள்கைப் பதித்துரைகள் தொகுதியொன்றுடன் அறிந்த தீர்மானங்களை வலுப்படுத்துவதற்கு விவசாயம், தூய சக்தி, கனிம பெறுமதி சேர்த்தல், காலநிலை மாற்றம் மற்றும் இடத்திற்கே உரிய உயிரியல் மூலவளங்களிலிருந்து ஊட்டச்சத்து மருந்துகள் என்ற துறைகளை மையப்படுத்தி ஈராண்டுக்கொரு முறையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாடு (BICOST-IX) 2023 இற்கு பிந்திய கொள்கை வரையப்பட்டது.

சான்று அடிப்படையிலமைந்த கொள்கை வகுப்புக்கு ஆதரவளிப்பதற்கு இசைவாக செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் பல எண்ணிக்கையான ஆலோசனை மன்றச் செயற்பாடுகளை கூட்டிணைப்பதற்கு பன்முக அணுகுமுறைகளையும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பின்பற்றியது. 2023 இல் 3 புதிய நிறுவனசார் செயலாற்றுகை மீளாய்வுகள் தொடங்கப்பட்டதுடன் 2019 மற்றும் 2022 ஆண்டுகளுக்கு இடையில் 06 நிறுவனசார் மீளாய்வுகள் நிறைவுசெய்யப்பட்டன. குறிப்பிடத்தக்க சாதனையாக ஆணைக்குழு 2017 மற்றும் 2021 ஆண்டுகளுக்கிடையிடையில் மீளாய்வு செய்யப்பட்ட சிறந்த செயலாற்றுகை நிறுவனங்களை அங்கீகரித்து விருது வழங்கும் நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. 2021 மற்றும் 2022 அறிக்கைகளுக்காக தரவு சேகரித்தல் ஆரம்பித்தலுடன் ஒன்றிணைந்து 2019 மற்றும் 2020 தொழில்நுட்ப நிலைமை அறிக்கைகளை வெளியிடுதலும் பரவச்செய்தலும் விஞ்ஞான சமூகத்திற்கு பெறுமதி மிக்க நுண்நோக்குகளை வழங்கியது.

கல்வியமைச்சரின் ஆதரவுடன் இடம்பெற்ற 9 ஆவது ஈராண்டுக்கொரு முறை நிகழும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான மாநாடானது (BICOST) 2023 ஆம் ஆண்டில் முக்கிய சாதனையாக அமைந்தது. இம்மாநாடு "காலநிலை மாறுகின்ற இந்த யுகத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நிலையான அபிவிருத்தியினை காணல்" என்ற தொனிப்பொருளை மையப்படுத்தியிருந்தது. இம்மாநாட்டின் பெறுபேறுகள் நான்கு தொழில்நுட்ப அறிக்கைகள் உள்ளடங்கலாக நிலைபெறத்தக்க அபிவிருத்தி உபாயங்களை சீரமைப்பதிலும் தேசிய இலக்குகளுடன் பொறுப்பேற்கப்பட்ட காலநிலை மாற்ற பரிஸ் உடன்படிக்கையினதும் பிரத்தியேக அங்கமாக பணியாற்றும்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையின்படி, தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கட்டமைப்பில் (NRDF) கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள 10 மையப் புள்ளிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இளம் விஞ்ஞானிகள் மன்றமானது (YSF) ஏற்பாடு செய்த 11வது ஆண்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கங்கத்தின் போது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது இந்த தலைப்புகளை பற்றி சர்வதேச அளவில் கலந்துரையாட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய 1 வது நிபுணர் குழு கூட்டத்தை கூட்டியது. மேலும் பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்மயற்சி (BICOST) இன் கீழ் ஹிமாலயன் விஞ்ஞான சபையின் இரண்டாவது நிபுணர் குழு கூட்டம் பிராந்திய ஒத்துழைப்பிற்கு பங்களித்தது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பினூடாக இந்தியாவில் அணிசேரா உறுப்பு (NAM) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் சகஉறுப்பரிமைகளில் பல எண்ணிக்கையான இலங்கை விஞ்ஞானிகள் பங்கேற்றனர். மேலும், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மொரிசியசில் இடம்பெற்ற NAM விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் 16 ஆவது ஆளுகை சபைக் கூட்டத்தில் இலங்கையின் பிரதநிதித்துவத்திற்கான நோக்குமையமாக செயற்பட்டது.

இவ்வடைவுகள் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு நிபணர்களின் அர்ப்பணிப்பிற்கும் ஒன்றுபட்ட உழைப்பிற்கும் சான்று பகர்கின்றது. ஆகையினால் அவர்களது வழிகாட்டலுக்கும் தொலைநோக்கிற்கும் ஆணைக்குழுவின் தலைவருக்கும் ஊக்கமிக்க உறுப்பினர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சாதனைகளின் முதுகெலும்பினை உருவாக்குகின்ற முயற்சிகளுக்காக ஆணைக்குழுவின் அயராத அர்ப்பணிப்பையும் நான் பாராட்டுகின்றேன்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு அதன் பொறுப்பாணைக்கு அமைவாக விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் முன்னேற்றுகின்ற அதன் செயற்பணியில் தொடர்ந்தும் சிறந்தும் விளங்குமென நான் நம்புகின்றேன்.

திருமதி கீதானி எஸ். கன்னங்கர
பதில் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர்
2024 ஆகஸ்ட் 23

## ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்



**பேராசிரியர். வெரஞ்ஞு கருணாரத்ன**
**தலைவர்**

பேராசிரியர் கருணாரத்ன இரசாயானவியலில் புகழ்பெற்ற ஒரு ஓய்வு பெற்ற பேராசிரியர் ஆவார். தற்போது இவர் SLTC ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் சிரேட்ட நிறைவேற்று அதிகாரியாகவும் ஆகவும் உள்ளார்.

தற்போது, அவர் பல நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றுகிறார்



**திருமதி . தீபா லியனகே**
**ஆணைக்குழு உறுப்பினர்**

திருமதி தீபா லியனகே அவர்கள் பிரதமரின் மேலதிக செயலாளர்.



**கலாநிதி டி.எம். சூரதிஸ்ஸ திசாநாயக**
**ஆணைக்குழு உறுப்பினர்.**

கலாநிதி டி.எம். சூரதிஸ்ஸ திஸாநாயக்க, அவர்கள் ஓர புதைபடிமவியல் ஆராய்ச்சியாளர் ஆவார். இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டு உள்ளவர். தற்போது இவர் இலங்கை உள்ளுராட்சி நிறுவனத்தில் பணிப்பாளராக ∴ பிரதம நிறைவேற்று அதிகாரியாக இரண்டாம் நிலை அடிப்படையில் பணிபுரிகிறார்





**பேராசிரியர் டி.எஸ்.ஏ .விஜேசுந்தர**

**ஆணைக்குழு உறுப்பினர்**

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்துடன் இணைந்த ஒரு ஆராய்ச்சிப் பேராசிரியர் ஆவார்.

.

**கலாநிதி. கெ.ஜி.-ஜ.அமரசிங்க**

**ஆணைக்குழு உறுப்பினர்**

கலாநிதி கெ.ஜி.-ஜ..அமரசிங்க அவர்கள், விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கை சபையின் முன்னாள் செயலாளர்.'.பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார்.





**கலாநிதி. நிர்மலி டி சில்வா**

**ஆணைக்குழு உறுப்பினர்**

கலாநிதி நிர்மலி டி சில்வா ஒரு பட்டயம் பெற்ற ஜவுளி தொழில்நுட்பவியலாளர். அத்துடன் அவர் இலங்கையில் ஜவுளி மற்றும் நாகரீக உடை அலங்கார பாணி பற்றிய கல்வியில் முன்னணியில் இருப்பதோடு தரம் மற்றும் உற்பத்தித்திறன் கருத்துக்கள் மற்றும் சான்றிதழை ஊக்குவிப்பவர் ஆவார்..

.

**திரு. துஷார வஜிர பெரேரா**

**ஆணைக்குழு உறுப்பினர்.**

திரு. து'ஆர வஜிர பெரேரா, அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மாண்புமிகு ஜனாதிபதியின் விஞ்ஞான விவகாரங்களுக்கான ஆலோசகர் ஆவார். தற்போது அவர் தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை நனோ தொழிநுட்ப நிறுவனம் (ளுடுஐவேநுஊ) ஆகியவற்றின் சபை உறுப்பினராகவும் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மன்ற உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

## திறைசேரி பிரதிநிதி



**திருமதி டிலுபா பர்ணாந்து**

**திறைசேரி பிரதிநிதி**

திருமதி டிலுபா பர்ணாந்து அவர்கள் நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் பணிப்பாளராக உள்ளார்.

## தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பதவியணியினர் – 2023

| | |
|---|---|
| **பேராசிரியர் வெரஞ்ச கருணாரத்ன** | தலைவர் |
| **திரு. ஜனக எஸ். கீகியானகே** | பதில் பணிப்பாளர்.ஃ. சி.நி.அ.(2023 நவம்பர் 13 வரையில்) |
| **திருமதி. . ஜி.எஸ்.. கன்னங்கர** | பதில் பணிப்பாளர்.ஃ. சி.நி.அ (2023 நவம்பர் 14 இலிருந்து) |
| **திரு. செயத் சஹமி** | சிரேட்ட விஞ்ஞானி |
| **திருமதி.ஜி.சி. குமாரி பீரிஸ்** | பதில் பணிப்பாளர் – நிதி மற்றும் நிர்வாகம் |
| **திருமதி.எம்.டி. திலினி** | விஞ்ஞானி |
| **திருமதி. ரசித பெரேரா** | விஞ்ஞானி |
| **திருமதி. யு.கெ.டி.எல்.எச்.கெ. உடுகம** | நிர்வாக அலுவலர் |
| **திரு. எஸ்.எ.டி.எஸ் .பி. சேனநாயக** | த.தொ.தொ.ஃ. தரவுத்தள கூட்டிணை அலுவலர் |
| **திரு. ஆர்.எம்.டி. ரத்நாயக** | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் – நிதி |
| **திரு.அனில் ஆராய்ச்சி** | சாரதி |
| **திரு. ஜயஷாந்த பிரபாத்** | சாரதி |
| **திரு. எரந்த பிரதீப்** | சாரதி |
| **திரு.எ.டி. தனபால** | அலுவலக உதவியாளர் |
| **திரு. .பி.சி.யு. இளங்ககூன்** | அலுவலக உதவியாளர் |

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (1): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்*

### 01. தேசிய சுதேச சுகாதாரக் கொள்கை (கொள்கை ஆலோசனை)

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தை (டீஆயுசுஜ) மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு, தேசிய **சுதேச மருத்துவ கொள்கையின்** அவசியத்தை பரிந்துரைத்தது.இது ஒரு சுதேச மருத்துவம் அல்லது ஆயுர்வேதம் அடிப்படையிலான மருந்தியல் வளர்ச்சிக்கு பாதையினை வகுக்கும். கொள்கை ஆலோசனை நடவடிக்கைகளின் கீழ் இந்தக் கொள்கையை உருவாக்க தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு உதவியது, மேலும் கொள்கை இறுதி செய்யப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது

### 02. மரபணு மையங்கள் மற்றும் தேசிய மரபணு தரவுக் களஞ்சியம் பற்றிய தேசிய கொள்கை

2018 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் , **மரபணு மையங்கள் மற்றும் தேசிய மரபணு தரவுக் களஞ்சியம்** ஆகியவை தொடர்பில் உருவாக்கப்பட்ட தேசியக் கொள்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு அதனை மீண்டும் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரைவு குறித்து பொதுமக்களிடம் கருத்துக்கள் கோரப்பட்டன. நிபுணர்களிடமிருந்து பெற்ற உசாவுகையுடன் கருத்துகள் இணைக்கப்பட்டதோடு, தேசிய உயிரி தொழில்நுட்பத்தின் விரிவான கொள்கையுடன் அமைச்சரவை சமர்ப்பிப்புக்கு வரைவு தயாராக உள்ளது, இது இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு ஆகியவற்றால் கூட்டாக புதுப்பிக்கப்பட்டது.

### 03. இலங்கையின் தேசிய கனியவளம் பற்றிய கொள்கை (கொள்கை ஆலோசனை)

சுற்றாடல் அமைச்சின் கோரிக்கைக்கு அமைவுற, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வடிவத்திற்கு இணங்க வரைவுக் கொள்கை திருத்தப்பட்டது. சுற்றாடல் அமைச்சுடனான பங்குதாரர் சந்திப்பிற்கு தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு தனது ஆதரவினை வழங்கியது. வுற்றாடல் அமைச்சானது. இறுதிப் பதிப்பை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தது.

### 04. 2023 ஆம் ஆண்டில் தொடரப்படுவதற்குள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஈராண்டுக்கொருமுறையான மாநாட்டின் (BICOST) பிந்தைய செயல்பாடுகளாகப் பணிபுரிய பின்வரும் விடயங்கள் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்ப அறிக்கைகள் என்ற வகையில் நான்கு கொள்கைப் பரிந்துரைகள் உள்ளன:

அ. காலநிலை மாற்றம் , விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு

ஆ. இலங்கையில் உள்ள உள்ளூர் உயிர் வளங்களில் இருந்து ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் பிரதான மருத்துவ கலவைகள்

இ. இலங்கையின் இயற்கை வளங்கள் மற்றும் கனிமங்கள், பெறுமதி அதிகரிப்பு


**ஈ. தூய்மையான ஆற்றல், பச்சை ஹைட்ரஜன் மற்றும் ஆற்றல் சேமிப்பு**


## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (2): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளினை இலங்கையில் மீள் நோக்கி அது தொடர்பில் வருடாந்தம் அரசுக்கு ஒரு அறிக்கையினை சமர்ப்பித்தல்..*

கடந்த வருடத்தில் இலங்கையில் இடம் பெற்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வு செய்து,அது தொடர்பில் வருடாந்தம் அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் என்ற செயற்பாடானதுஇ தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு கட்டாயமாகப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மனித வள மேம்பாட்டிற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்திறன், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்திறன், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் அரசினால் செய்யப்பட்ட செலவினங்களின் செயல்திறன் மற்றும் அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும்.

➢ <u>**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைப்பாடு பற்றிய அறிக்கை 2019-2020 மற்றும் 2021**</u>

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அத்துடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு அறிக்கைகளுக்கான தரவு சேகரித்தல் பணி தொடங்கப்பட்டுள்ளது.




<u>**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைப்பாடு பற்றிய அறிக்கை 2019-2020**</u>

*உரு 3: விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைப்பாடு பற்றிய அறிக்கை 2019-2020*

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தினை மீளாய்தல்*

**சட்டத்தின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை மதிப்பாய்வு செய்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளாவன, தேசிய முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளினை சாதிக்கக்கூடிய அளவிற்கு உள்ளதா என்பதனை அறிய அந்த நடவடிக்கைகளின் தரம், கிரய பயனுறுதி , பொருத்தம் மற்றும் தாக்கம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, ஆணைகுழுவின் அனுமதியுடன் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட வெளிப்புற ஆளணியினரினை கொண்ட குழுக்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் நிபுணர்களால் மதிப்பாய்வுகள் நடத்தப்படுகின்றன. அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கையேடு மற்றும் சுய மதிப்பீட்டு அறிக்கை (SAR) ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. பங்குதாரர்களுடன் முன்னெடுக்கப்பட்ட உசாவுகைகள் மூலம் மேலதிக தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

மதிப்பாய்வு செயல்முறை நான்கு தனித்துவமான கட்டங்களைக் கொண்டுள்ளது.

- மதிப்பாய்வுக்கான தயாரிப்பு.
- நிறுவனங்களுக்கு மதிப்பாய்வு குழு வருகை செய்தல்.
- மதிப்பாய்வு குழுவால் வரைவு அறிக்கை தயாரிக்கப்படல்
- இறுதி மதிப்பாய்வு அறிக்கையானது மதிப்பாய்வுக் குழுவினால் சரிபார்க்கப்படலும் மற்றும் தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படலும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2017–2021) தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்ட சிறந்த செயல்திறன் கொண்ட நிறுவனங்களுக்கு இரண்டு விருதுகளை வழங்க தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஈராண்டுக்கொருமுறையான மாநாட்டின் துணைக்குழு முடிவு செய்ததுடன் இந்த நிகழ்வை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஈராண்டுக்கொருமுறையான மாநாடு IX உடன் இணைந்த வகையில் நடத்துவதற்கு தீர்மானம் செய்தது. நிகழ்வில் பாரபட்சமற்ற தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, பல்வேறு அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு எந்த அமைச்சின் கீழ் அமைகின்றதோ சேர்ந்த அதே அமைச்சினை சார்ந்த ஏனைய நிறுவகங்களும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுகின்றன. இலங்கை மதிப்பீட்டாளர்கள் சங்கம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவுடன் இணைந்து ஒரு சுயாதீன தரப்பினராக தன்னார்வ அடிப்படையில் செயற்பட்டது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது 13 செயல்திறன் மதிப்பாய்வு அறிக்கைகளின் முழுமையான மதிப்பீட்டிற்குப் பிறகு, தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் நிகழ்வில் சிறப்பாகச் செயல்படும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டன.




*உரு 4 நிறுவன ரீதியிலான மீளாய்வு அறிக்கைகளின் வெற்றியாளர்கள்*

2023 ஆம் ஆண்டில், 2019 மற்றும் 2022 க்கு இடையிலான செயல்திறன் மதிப்பாய்வுகளுக்கான ஆறு நிறுவன மதிப்பாய்வு அறிக்கைகளை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பாய்வு செய்ய தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு கட்டாயப்படுத்தப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் கருத்துரைகளின் அடிப்படையில், மீள்நோக்கப்பட்ட பரிந்துரைகளின் செயற்படுத்துகையினை கண்காணித்து மதிப்பீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. இதன் முதற் கட்டமாக, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, மே மாதம் 04 ஆம் திகதி,மேகாமைத்துவ சேவைகள் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், கல்வி அமைச்சு, கணக்காய்வாளர் நாயக திணைக்களம் மற்றும் . 2020 மற்றும் 2022 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மதிப்பாய்வு செய்த நிறுவனங்களின் தலைவர் ஆகியோர்களினை உள்ளடக்கிய பிரதானஅரச அமைப்புக்களுடன் ஒரு சந்திப்பை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு அதனது செயலகத்தில் முன்னெடுத்தது.

இந்த நிகழ்வின் போது, ஒவ்வொரு மீளாய்வுக் குழுவின் தலைவர்களும் அந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் அந்த செயற்பாடுகள் தொடர்பிலான கண்டுபிடிப்புகள் மற்றும் அதற்காக முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை முன்வைத்தனர். இந்தக் சந்திப்பில், செயல்படுத்தலின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், செயல்பாட்டின் போது எழும் ஏதேனும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் மற்றொரு சந்திப்பினை ஏற்பாடு செய்ய தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு முடிவு செய்தது.

மீளாய்வு செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதனை தொடர்ந்து கண்காணித்து மதிப்பிடுவதற்காக, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி இசுருபாய கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் குழு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வானது, செயல்படுத்தும் தடைகளை அடையாளம் கண்டு, கூட்டுத் தீர்வுகளை வழங்குவதற்கும், தேசிய அளவிலான கொள்கை முடிவுகளைப் பெறுவதற்கும், குறிப்பாக தேசிய பாதீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு ஆகியவை தொடர்பில் பன்முக அணுகுமுறைக்கு வழி கோலியது. 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 03 நிறுவனங்களின் மீளாய்வினை முன்னெடுத்தது.

1. தேசிய உர செயலகம் (NFS)
2. தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)
3. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)

### தேசிய உர செயலகம் (NFS)

தேசிய பசளை செயலகமானது, 1988 ஆம் ஆண்டு 1988 ஆம் ஆண்டின் உர ஒழுங்குமுறைச் சட்ட இலக்கம் 68 இன் கீழ் நிறுவப்பட்டதுடன் தற்போது செயலகமானது, விவசாய அமைச்சின் கீழ் செயற்படுகிறது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, 2023 அக்டோபர் மாதம்.இல் தேசிய உரச் செயலகத்தின் (NFS) மதிப்பாய்வைத் தொடங்கியது, மேலும் மதிப்பாய்வு செய்ய பின்வரும் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

1. பேராசிரியர் புத்தி மாரம்பே (தலைவர் )
2. கலாநிதி. ஜினாதரி டி சொய்சா
3. கலாநிதி. சரத் அபேசிங்க

நிறுவனத்திற்கு விஜயம் செய்யும் முன்னர் குழுவானது விவசாய அமைச்சின் செயலாளரை நவம்பர் 16ஆம் திகதி சந்தித்து ஆரம்ப கலந்துரையாடலொன்றை மேற்கொண்டது. அதே நாளில், குழுவானது நிறுவனத்திற்கு மீண்டும் விஜயம் செய்து, தேசிய உர செயலகத்தில் பணிப்பாளர் மற்றும் சிரேட்ட பணியாளர்களை சந்தித்தது. குழுவானது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மதிப்பாய்வை பூரணப்படுத்தும்.

### தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)

தேசிய ஆராய்ச்சி மன்றம் என்பது, இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிதியளிப்பதோடு, தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்க கூடிய ஆராய்ச்சிக்கு ஆதரவு வழங்குவதுடன் விஞ்ஞானிகளை அவர்களின் ஆராய்ச்சி சிறப்பிற்காக அங்கீகரிக்கிறது.

தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் மதிப்பாய்வும் 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கீழே குறிப்பிடப்பட்ட நிபுணர்கள் உள்ளடங்கிய குழுவுடன் தொடங்கப்பட்டது.

1. கலாநிதி சுனில் அபயரத்ன (தலைவர்)
2. பேராசிரியர் எச்.எம்.டி.என்.ஆர். ஹேரத்
3. கலாநிதி எம்.சி.எம். இக்பால்

சனாதிபதி விருது வழங்கும் விழா போன்ற அவர்களின் மற்ற கடமைகளின் காரணமாக சுட்டிக்காட்டியதால், இந்த நிறுவனத்திற்கான வருகையினை ஜனவரி 2024 வரை ஒத்திவைக்கும்படி தேசிய ஆராய்ச்சி மன்றம் சிறப்பு கோரிக்கை விடுத்ததை கருத்தில்கொண்டு நிறுவனத்திற்கு முன்னெடுக்கப்படவிருந்த விஜயமானது தள்ளிப்போடப்பட்டது. இவ்வாறாக இருந்த போதிலும் மதிப்பாய்வுக்குழு நிகழ்நிலை அடிப்படையில் பல கூட்டங்களை நடத்தியது.

### இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)

உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களது புது வகையான கருத்துக்களில் இருந்து அவற்றினை படிப்படியாக வளர்த்து அவற்றை நடைமுறை மட்டத்திற்கு மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வணிக அளவிலான தயாரிப்பாக நிறைவடையச் செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப, சட்ட மற்றும் நிதி உதவிகளை கல்வி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் அடங்கும் இலங்கை புத்தக்குனர் ஆணைக்குழு (SLIC), வழங்குகிறது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினது மதிப்பாய்வை 2023 ஒக்டோபர் மாதம் தேசிய விஞ்ஞான மன்றம் தொடங்கியது, மேலும் இந்த நோக்கத்திற்காக பின்வரும் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்:

1. திருமதி எம்.சி. ராஜபக்ஷ (தலைவர்)
2. பேராசிரியர் நிஷாந்த சம்பத் புஞ்சிஹேவா
3. பேராசிரியர் தனுஜா சாந்தனி சந்தநாயக்க

குழுவானது டிசம்பர் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் மீளாய்வு விஜயத்தை மேற்கொண்டதுடன், மேலதிக கலந்துரையாடலுக்காக நிறுவனத்தின் நிர்வாகத்தையும் ஊழியர்களையும் சந்தித்தது. மறுஆய்வு நெறிமுறையைத் தொடர்ந்து, கண்டுபிடிப்பாளர்களுடன் பங்குதாரர் சந்திப்பு 13 டிசம்பர் 2023 அன்று SLIC வளாகத்தில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில், கிட்டத்தட்ட 25 க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்பாளர்கள் நேரில் பங்கேற்றனர்.

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயல்பாடு (4): அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கலந்தாலோசித்தல்.**

**கொள்கை இடைவெளிகள் மற்றும் தேவைப்பாடுகளினை இனம் காண்பதற்கு விஞ்ஞானிகள், எந்திரிகள் மற்றும் ஆராய்சியாளர்களினை ஒன்று திரட்டல்**

**1. இளம் விஞ்ஞானிகள் மன்றம் (YSF)**

இலங்கையின் இளம் விஞ்ஞானிகள் மன்றமானது (YSF) 2000 ஆம் ஆண்டு முதல் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் நோக்கானது, இலங்கையில் உள்ள இளம் விஞ்ஞானிகளுக்கு அறிவுப் பகிர்வுக்கான ஒரு தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்குதல் ஆகும். இளம் விஞ்ஞானிகள் மன்றமானது, தற்போது வெவ்வேறு பிரிவுகளில் 400 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் தன்னகத்தே கொண்டுள்ளது.

***I. இளம் விஞ்ஞானிகள் முன்னரங்கினை வழி நடத்தும் குழு (YSF)***

இளம் விஞ்ஞானிகள் முன்னரங்கானது 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வழிநடத்தும் குழுவை (SC) கொண்டுள்ளது. வழிநடத்தும் குழுவானது, இரண்டு இணைச் செயலாளர்களினை கொண்ட ஒரு தலைவரால் வழிநடத்தப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய வழிநடத்தும் குழுவானது, வருடாந்த பொதுக்கூட்டத்தில் (AGM) தெரிவு செய்யப்படுகிறது. 2023 ஆம் ஆண்டுக்கான வழிநடத்தும் குழுவானது, 2023 சனவரி மாதம், 27 ஆம் திகதியன்று மெயநிகர் அடிப்படையில் நடைபெற்றது.

***II. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு***

2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் ஆராய்ச்சி கருத்தரங்கானது, தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான ஒரு தளத்தினை உருவாக்கும் அதே வேளையில், பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி ஆர்வங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிக்க இளம் விஞ்ஞானிகளுக்கு உரிய ஒரு தளத்தை வழங்கும் முக்கிய நோக்கத்துடன் ஒரு பிரபலமான நிகழ்வாக மாறியுள்ளது.

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, தனது ஆராய்ச்சி கருத்தரங்கின் 11வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், ஒரு நிகழ்வினை ஒரு மெய்நிகர் நிகழ்வாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. வருடாந்திர ஆராய்ச்சி கருத்தரங்கை நடத்த விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் (EA) மற்றும் முழு ஆவணங்கள் ஆகிய (FP) இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கான அழைப்பிற்குப் பதிலளிக்கும் விதமாக, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, 41 விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் (EA) மற்றும் 19 முழு ஆவணங்கள் (FP) ஆகியவற்றைக் கொண்ட 60 ஆய்வுக் கட்டுரைகளை பெற்றுக்கொண்டது. இவை, தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தினால் (NRDF) அடையாளம் காணப்பட்ட 10 மையப் பகுதிகளுடன் அதாவது, இதில் ஆரோக்கியம், உணவு, ஊட்டச்சத்து மற்றும் விவசாயம், சுற்றுச்சூழல், நீர், ஆற்றல், தங்குமிடம், கனிம வளங்கள், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் அறிவு சேவைகள், அடிப்படை அறிவியல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு போன்ற துறைகளுடன் தொடர்புடையதாக அமைந்தது. ஒவ்வொரு ஆவணமும் இரண்டு மூத்த விஞ்ஞானிகளால் ஆக்கங்களினை எழுதியவர் நோக்குனர் ஆகிய இரு தரப்பினருக்கும் ஒருவருக்கொருவர் தெரியப்படுத்தாது (on a double-blind review process) என்ற ரீதியில் மதிப்பாய்வு செய்யப்பட்டன. இவற்றுள் 36 விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் (EA) மற்றும் 17 முழு ஆவணங்கள் (FP) உட்பட 56 ஆவணங்கள் மெய்நிகர் தளம் வழியாக கருத்தரங்கில் சமர்ப்பிக்கபடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் கருத்தரங்கில் மின் செயல்முறை அடிப்படையில் வெளியிடப்படும்.

கௌரவ அதிதியாக கலந்துக்கொண்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியருமான உதித் கே. ஜயசிங்க முதலிகே அவர்கள் கருத்தரங்கின் தொடக்க விழாவில் உரையாற்றியதுடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ரங்கிக ஹல்வத்துர பிரதான உரையை வழங்கினார்.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இளம் விஞ்ஞானிகள் மன்றமானது, இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி கருத்தரங்கின் 12 வது கருத்தரங்கினை 2024 ஜனவரி மாதத்தில் நடத்த திட்டமிட்டதுடன் இதன் நிமித்தம், நீட்டிக்கப்பட்ட சுருக்கங்கள் மற்றும் முழு ஆவணங்கள் இரண்டிற்கும் அழைப்பு விடுத்தது. இதனைத்தொடர்ந்து, 47 நீட்டிக்கப்பட்ட சுருக்கங்கள் மற்றும் 25 முழு ஆவணங்கள் உள்ளடங்கலாக 72 ஆய்வுக் கட்டுரைகள் ஏழு தலைப்புக்களின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டன. 1)உயர்பொறியியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள் (2) பொருளாதாரம், நிதி மற்றும் மேலாண்மை (3) ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் (4) உணவு, ஊட்டச்சத்து மற்றும் விவசாயம் (5) கணினி மற்றும் தகவல் அறிவியலில் எல்லைகள் (6) கற்பித்தல் மற்றும் கற்றலில் புதுமைகள் மற்றும் (7) நவீன சுகாதாரம் மற்றும் பாரம்பரிய சிகிச்சைமுறை நடைமுறைகள். ஒவ்வொரு ஆவணமும் இரண்டு மூத்த விஞ்ஞானிகளால் ஒருவருக்கொருவர் தெரியப்படுத்தாது மதிப்பாய்வு செயல்முறையில் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, 38 விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் (EA) மற்றும் 15 முழு ஆவணங்கள் (FP) உட்பட 53 ஆவணங்கள் 2024 ஜனவரி மாதத்தில் மெய்நிகர் தளம் வழியாக கருத்தரங்கில் சமர்ப்பிக்கபடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன.

## *III. தேசிய ரீதியிலான முன்னுரிமைகள் மற்றும் நாட்டில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பில் நிகழ்நிலை அடிப்படையில் விழிப்புணர்வு தொடர் (நிகழ் நிலை அடிப்படையிலரன தொடர்)*

இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின், செயல்பாட்டுத் திட்டம் 2023 இனது ஒரு பகுதியாக நிகழ்நிலை அடிப்படையில் விழிப்புணர்வு (webinar series) வலை தள தொடர்களை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்நிலை தொடர்களின் பிரதான நோக்கமானது, நாட்டில் நடப்பு மற்றும் வளர்ந்து வரும் விஞ்ஞான விவகாரங்கள் குறித்து இளம் விஞ்ஞானிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அறிவைப் பரப்புவதும் ஆகும். மேற்கூறிய நோக்கத்தின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் நான்கு விழிப்புணர்வு வலைதளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

### i. 'சுற்றுச்சூழலில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ்: பிரித்தெடுத்தல் மற்றும் அடையாளம் காண்பதற்கான நுட்பங்கள்' பற்றி இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்


தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைகுழுவின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் மன்றத்தால் (YSF) தொடர்ச்சியாக நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்நிலை அடிப்படையிலான அறிவுப் பகிர்வு அமர்வுகளின் மூன்றாவது அறிவுப்பகிர்வு நிகழ்வானது, 2023 ஆம் ஆண்டில் இடம் பெற்றதோடு இதன் 1 வது நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளமானது, 2023 ஜூன் மாதம் 21ஆம் திகதி, சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு விஞ்ஞான பீடத்தின் சுற்றுச்சூழல் பின்னடைவு ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டதுடன் இதன் போது 'சுற்றுச்சூழலில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ்: பிரித்தெடுத்தல் மற்றும் அடையாளம் காண்பதற்கான நுட்பங்கள்' என்ற தலைப்பு தொடர்பில் இந்த வலையரங்கில் கவனம் செலுத்தப்பட்டது. சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சுற்றுச்சூழல் மீள்தன்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மெத்திகா விதானகே அவர்கள் சிறப்பு பேச்சாளர் என்ற வகையில் பங்கு பெறுனர்களுக்கு நிகழ்நிலை ஊடாக உரையாற்றியதுடன் பங்கேற்பாளர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட வளவாளர் "சுற்றுச் சூழலில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ், மற்றும் அதனால் ஏற்படும் தாக்கம் மற்றும் அடையாள நுட்பங்கள்" தொடர்பிலான ஒரு கண்ணோட்டத்தினை வழங்கினார். சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுஷ்கா யூ. ராஜபக்ஷ அவர்கள் இந்த அமர்வை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார். கேள்வி பதில் அமர்வுக்குப் பிறகு அமர்வு வெற்றிகரமாக முடிந்தது மேலும் 100க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் அமர்வில் இணைந்தனர்.




*உரு5: சுற்றுச்சூழலில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்*

**ii. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்**
**ஒரு மரபணு முதல் மரபணுக்கள் தொகுதி வரை: தாவர நோய்க்கிருமி பூஞ்சைகளைப் ஆய்வு செய்ய DNA வரிசைத் தரவைப் பயன்படுத்துவதன் நன்மைகள்**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் மன்றத்தால் (YSF) 2023 ஆம் ஆண்டின் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்நிலை ஊடான அறிவுபகிர்வு அமர்வு தொடரின் 2 வது வெபினார் 2023 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று நடைபெற்றது. இதன் போது ஒரு மரபணு முதல் மரபணுக்கள் தொகுதி வரை: தாவர நோய்க்கிருமி பூஞ்சைகளைப் ஆய்வு செய்ய DNA வரிசைத் தரவைப் பயன்படுத்துவதன் நன்மைகள் என்ற தலைப்பு தொடர்பில் இந்த வலையரங்கில் கவனம் செலுத்தப்பட்டது. சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் உயிரியல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி தனுஷ்க உதயங்க அவர்கள் சிறப்பு பேச்சாளர் என்ற வகையில் பங்கு பெறுனர்களுக்கு நிகழ்நிலை ஊடாக உரையாற்றியதுடன் பங்கேற்பாளர்களுக்கு வளவாளர் என்ற ரீதியில் ஒரு மரபணு முதல் மரபணுக்கள் தொகுதி வரை: “தாவர நோய்க்கிருமி பூஞ்சைகளை ஆய்வு செய்ய DNA வரிசைத் தரவைப் பயன்படுத்துவதன் நன்மைகள்” எனும் பொருள் தொடர்பிலான கண்ணோட்டத்தினை வழங்கினார். சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் உயிரியல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் கலாநிதி சுமுது மாபா அவர்கள் இந்த அமர்வை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார். கேள்வி பதில் அமர்வுக்குப் பிறகு அமர்வு வெற்றிகரமாக முடிந்தது. மேலும் 35 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் அமர்வில் இணைந்தனர்.




*உரு 6: ஒரு மரபணு முதல் மரபணுக்கள் தொகுதி வரை: தாவர நோய்க்கிருமி பூஞ்சைகளைப் ஆய்வு செய்ய DNA வரிசைத் தரவைப் பயன்படுத்துவதன் நன்மைகள்*
*இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்*

**iii. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்: பட்டதாரிகள் பாடசாலைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு சிறப்பாக எழுதுவது**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் மன்றத்தால் (YSF) 2023 ஆம் ஆண்டின் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்நிலை ஊடான அறிவு-பகிர்வு அமர்வு தொடரின் 3 வது வெபினார் 2023 நவம்பர் 15 ஆம் திகதியன்று நடைபெற்றது. இதன் போது பட்டதாரிகள் பாடசாலைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு சிறப்பாக எழுதுவது என்ற தலைப்பு தொடர்பில் இந்த வலையரங்கில் கவனம் செலுத்தப்பட்டது.கனடாவில் உள்ள டல்ஹௌசி பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை பேராசிரியர் அருணிகா குணவர்தன அவர்கள் சிறப்பு பேச்சாளர் என்ற வகையில் பங்கு பெறுனர்களுக்கு நிகழ்நிலை ஊடாக உரையாற்றியதுடன், அவர்கள் பங்கேற்பாளர்களுக்கு, வளவாளர் என்ற ரீதியில், நிர்வாக குழுவினரை கவரும் வகையில் சிறப்பான முறையில் பட்டதாரிகள் பாடசாலைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு சிறப்பாக எழுதுவது எனும் பொருள் தொடர்பிலான கண்ணோட்டத்தினை வழங்கினார். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கூட்டுசார் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனத்தினை சார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி அஞ்சலா ஐ. குருப்பு அவர்கள் இந்த அமர்வை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார். கேள்வி பதில் அமர்வுக்குப் பிறகு அமர்வு வெற்றிகரமாக முடிந்தது. மேலும் 65 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் அமர்வில் இணைந்தனர்.




*உரு 7: பட்டதாரிகள் பாடசாலைக்கான விண்ணப்பத்தினை எவ்வாறு சிறப்பாக எழுதுவது*

*இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்*

### iv. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்: கல்வியியலாளர்களின் வெளியீட்டு பரப்பெல்லை

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் மன்றத்தால் (YSF) 2023 ஆம் ஆண்டின் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்நிலை ஊடான அறிவு-பகிர்வு அமர்வு தொடரின் 4 வது வெபினார் 2023 டிசம்பர் 16ஆம் திகதியன்று நடைபெற்றது. இதன் போது 'கல்வியியலாளர்களின் வெளியீட்டு பரப்பெல்லை' என்ற தலைப்பு தொடர்பில் இந்த வலையரங்கில் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் நெநோ விஞ்ஞான தொழில்நுட்பத் திணைக்களத்தினை சார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி ரொஷான் தொட்டகமுகே அவர்கள் சிறப்பு பேச்சாளர் என்ற வகையில் பங்கு பெறுனர்களுக்கு நிகழ்நிலை ஊடாக உரையாற்றியதுடன், அவர்கள் பங்கேற்பாளர்களுக்கு, வளவாளர் என்ற ரீதியில், ''கல்வியியலாளர்களின் வெளியீட்டு பரப்பெல்லை :வெளியீட்டு செயல்முறையை வழிநடத்துதல், பத்திரிகை அளவீடுகளைப் புரிந்துகொள்வது மற்றும் வெளியீட்டு நெறிமுறைகளை நிலைநிறுத்துதல்'' எனும் பொருள் தொடர்பிலான கண்ணோட்டத்தினை வழங்கினார். இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின், நநோ விஞ்ஞான தொழில்நுட்பத் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் மற்றும் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வழிநடத்தல் குழு உறுப்பினருமான கலாநிதி உபனித் எஸ். லியனாராச்சி அவர்கள் இந்த அமர்வை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தினார். கேள்வி பதில் அமர்வுக்குப் பிறகு அமர்வு வெற்றிகரமாக முடிந்தது மேலும் 70 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் அமர்வில் இணைந்தனர்.




*உரு 8: கல்வியியலாளர்களின் வெளியீட்டு பரப்பெல்லை, இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நிகழ்நிலை அடிப்படையிலான வலைத்தளம்*

### IV. இளம் விஞ்ஞானிகளுக்கான திறன் அபிவிருத்தி பயிலரங்கம்

இளம் விஞ்ஞானிகளுக்கு பல்வேறு துறைகளில் அவர்களது திறன் மற்றும் செயற்றிறனை வளர்ப்பதற்கு உதவும் வகையில், வருடம் முழுவதும் திறன் மேம்பாட்டு மெய்நிகர் பட்டறைகளை நடத்த இளம் விஞ்ஞானிகள் மன்றம் திட்டமிட்டுள்ளது.

## i. இலங்கையில் இரத்தினக்கல் தொழில் தொடர்பான பட்டறை: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தால் (YSF) தொடர்ச்சியாக நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்நிலை அடிப்படையிலான திறன் அபிவிருத்தி பயிலரங்கத்தின் 1வது பயிலரங்கமானது, 2023, ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது. இது இயற்கை வள ஆய்வுகள் சங்கம் (SNRS), சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இயற்கை வளங்கள் திணைக்களம் மற்றும் இரத்தினபுரியிலுள்ள இரத்தினம் மற்றும் பசுமை சங்கம் (RGGA) ஆகியவை இளம் விஞ்ஞானிகள் மன்றத்துடன் இணைந்து, ஏற்பாடு செய்த ஒரு பயிலரங்கமாகும். இந்த பயிலரங்கத்தின் போது 'இலங்கையில் இரத்தினக்கல் தொழில் தொடர்பான பட்டறை: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்' என்ற பொருள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன். மொரட்டுவ பல்கலைக்கழகத்தினை சார்ந்த பேராசிரியர் பி.ஜி.ஆர். தர்மரத்ன, தேசிய இரத்தினம் மற்றும் நகை அதிகாரசபையின் தேசிய அமலாக்கம்மற்றும் பிராந்திய வளர்ச்சி பிரிவினது பிரதி பணிப்பாளர் திரு. என்.பி. சமரதுங்க. மற்றும், புன்சிறி ஜெம்ஸ் நிறுவகத்தினை சார்ந்த திரு. புன்சிறி தென்னகோன் ஆகியோர் வளவார்களாக கலந்துக்கொண்ட இந்த பயிலரங்கமானது சப்ரகமுவ பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றதுடன் இதில் 200க்கும் மேற்பட்டவர்கள் நிகழ் நிலை அடிப்படையிலும் பௌதீக ரீதியாகவும் கலந்துகொண்டனர். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் இயற்கை வளங்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹசிந்த விஜேசேகர செயலமர்வை நெறிப்படுத்தினார்.





*உரு 9: இலங்கையில் இரத்தினக்கல் தொழில் தொடர்பான பட்டறை*

## V. நாட்டின் தேசிய முன்னுரிமைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய ,ளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வெளியீட்டு தொடர்

இளம் விஞ்ஞானிகள் மன்றமானது 2021 ஆம் ஆண்டில் அதன் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று என்ற வகையில் ஒரு அத்தியாயத்தினை கொண்ட மின்னூலினை வெளியிடத் தொடங்கியதுடன் அப்பணி 2023 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்தது. இந்த மின் புத்தகத்தின் முக்கிய நோக்கம், அடையாளம் காணப்பட்ட தலைப்பில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் விரிவான மதிப்பாய்வு மற்றும் கொள்கை இடைவெளிகளைக் கண்டறிவதாகும். இந்த மின் புத்தகத்தின் முக்கிய நோக்கம், அடையாளம் காணப்பட்ட தலைப்பில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் விரிவான மதிப்பாய்வு மற்றும் கொள்கை இடைவெளிகளைக் கண்டறிவதாகும். மதிப்பாய்வுகளினது அடிப்படையில் கொள்கை அமுலாக்கத்திற்கான பரிந்துரைகள் மற்றும் புதிய கொள்கை பகுதிகள் ஆகியவை முன்னிலைப்படுத்தப்படுவதுடன் இவை புதிய கொள்கை உருவாக்கம் மற்றும் செயல்படுத்தும் செயல்முறைகளில் உள்ளடக்கப்படுவதோடு இளம் விஞ்ஞானிகளுக்கு கொள்கை உருவாக்கும் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

இரண்டாவது மின்னூலின் தலைப்பு ‘‘இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்துவதற்கான பல்துறை அணுகுமுறைகள்’’ என்பதாகும். மேற்கூறிய தலைப்பின் கீழ் பல்வேறு வகையான அணுகுமுறைகளினை அடிப்படையாக கொண்டு 16 புத்தக அத்தியாயங்கள் இளம் விஞ்ஞானிகள் மன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 2023 ஜனவரி மாதம் 27 ஆம் திகதியன்று நடைபெற்ற 11வது இளம் விஞ்ஞானிகள் மன்ற கருத்தரங்கின் போது ISBN எண்ணுடன் கூடிய மின் புத்தகம் வெளியிடப்பட்டது.




*உரு 10: இளம் விஞ்ஞானிகள் மன்ற கருப்பொருளுக்கான மின் பதிப்பு – இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்துவதற்கான பல்துறை அணுகுமுறைகள்*

1வது மற்றும் 2வது கருப்பொருள் மின்புத்தகங்களினது வெற்றிகரமான வெளியீட்டினை தொடர்ந்து, YSF ”காலநிலை மாற்றங்கள், தாக்கங்கள், பாதிப்புகள், தணிப்பு மற்றும் அவற்றினை பின்பற்றுதல் இலங்கையின் கண்ணோட்டத்தில்’’ எனும் தலைப்பில் தொகுக்கப்பட்ட 3வது கருப்பொருள் மின்புத்தகத்தினது வெளியீடு 2024 ஆம் ஆண்டு இளம் விஞ்ஞானிகள் மன்ற கருத்தரங்கின் போது வெளியிடப்படும்.

## VI. இளம் விஞ்ஞானிகளுக்கான விருது

ஒவ்வொரு ஆண்டும் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தில் (YSF) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறந்த இளம் விஞ்ஞானிக்கு இளம் விஞ்ஞானி (YS) விருதை வழங்கி தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு அவர்களினை கௌரவிக்கின்றது. ஆணைகுழுவினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவின் முடிவுகளின்படி, இளம் விஞ்ஞானிகளுக்கான விருதானது இரண்டு பிரிவுகளாக வழங்க முடிவு செய்யப்பட்டது. கேள்வியினை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2021 ஆம் ஆண்டு முதல் ”ஆராய்ச்சிக்கான இளம் விஞ்ஞானி விருது” மற்றும் ”தொழில்நுட்பத்திற்கான இளம் விஞ்ஞானி விருது”, என்ற அடிப்படையில் விருதுகள் வழங்க தீர்மானம் செய்யப்பட்டது. இந்த செயல்முறைக்கு, இரண்டு விருதுகளுக்கான தேர்வு அளவுகோல்களைக் குறிக்கும் திட்டங்களைத் திருத்தி முடிபு நிலைக்கு கொண்டு வந்த பின்பு, இந்த விருதுகளுக்குரிய விண்ணப்பங்களினை முன் வைக்கும்படி, தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, இலங்கையில் உள்ள இளம் விஞ்ஞானிகளினை கோரியது. 2022 ஆம் ஆண்டிற்குள் மொத்தம் 42 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவை தகுதிக்கு ஏற்ப பட்டியலிடப்பட்டன. மேலும் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் அவர்களின் ஏற்புடைமையின் அடிப்படையில் ஒவ்வொருவர் ஆணைகுழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட இரண்டு இளம் விஞ்ஞானிகளுக்கான விருதுகளாவன 2023, மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம் பெற்ற BICOST IX நிகழ்வில் வழங்கப்பட்டது.

_ ஆராய்ச்சிக்கான இளம் விஞ்ஞானி விருது – பேராசிரியர் பி.எ.டி.எச்.என். குணதிலக

_ தொழில்நுட்பத்திற்கான இளம் விஞ்ஞானி விருது - திரு. இமல்கா முனைவீர



*உரு 11: விருதினை வெற்றி கொண்ட இளம் விஞ்ஞானிகள்*

### *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது செயல்பாடு (5): விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஈராண்டுக்கொருமுறையான மாநாட்டைக் கூட்டுதல் (BICOST)*

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஈராண்டுக்கொருமுறையான மாநாடானது, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு ஏற்ப விஞ்ஞானம் மற்றும் கொள்கை இடைமுகத்தில் உள்ள தேசிய மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு தளத்தை வழங்குகிறது.


இதனடிப்படையில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஈராண்டுக்கொருமுறையான, 9வது மாநாடானது மார்ச் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கௌரவ கல்வி அமைச்சர் அவர்களது தலைமைத்துவத்தின் கூட்டப்பட்டதுடன் மாநாட்டின் தொனிப்பொருள் ''காலநிலை மாறுகின்ற இந்த யுகத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக நிலையான அபிவிருத்தியினை காணல்'' என்பதாகும்.

மாநாட்டின் முதல் நாள், இந்திய நாட்டின் அதிமேதகு உயர் ஸ்தானிகர் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள், இலங்கைக்கான ஐக்கிய இராஜ்யத்தின் அதிமேதகு தங்கிய தூதுவர் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டார். இந்நிகழ்வில் உயர்கல்வி இராஜாங்க அமைச்சரும் கலந்து கொண்டார்.

கல்வித்துறை, தொழில்துறை, நிர்வாகம், இராஜதந்திரம் மற்றும் கொள்கைத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 300க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இந்த இரண்டு நாள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் தொழில்நுட்ப வெளியீடுகளாக நான்கு தொகுப்புக் கொள்கைப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு, கௌரவ. கல்வி அமைச்சர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.






*உரு 12: BICOST IX தொழில்நுட்ப வெளியீடுகள்*

## சர்வதேச விவகாரங்கள்

### *பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (BIMSTEC): இராஜதந்திரத்தில் கொள்கைக்கான விஞ்ஞானம்.*

- வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) முன்முயற்சிக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த முதல் நிபுணர் சந்திப்பானது 2023 ஜூன் 21 ஆம் திகதியன்று வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட விடயத்துறை அமைச்சுடனும் இணைந்து நடத்தப்பட்டது. பிராந்திய ரீதியில் கிட்டத்தட்ட 60 க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர், மேலும் துறைசார் நடவடிக்கைகளுக்கான செயல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.



*உரு13 : வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) முன்முயற்சிக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த முதல் நிபுணர் சந்திப்பு*

- வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன் முயற்சியின் கீழ் இமாலய விஞ்ஞான மன்றத்தின் இரண்டாவது நிபுணர் சந்திப்பானது 2023 ஜூலை மாதம் 26 ஆம் திகதியன்று நடத்தப்பட்டது. வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன் முயற்சியின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 45 பங்கேற்பாளர்கள் இதில் கலந்துக்கொண்டனர் என்பதுடன் வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன் முயற்சியின் உறுப்பு நாடுகளிலிருந்து மொத்தம் 45 பங்கேற்பாளர்கள் தேசிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட விஞ்ஞான கொள்கைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் அத்துடன் பிராந்திய பிரச்சினைகளை குறிப்பாக காலநிலை மாற்றத்தின் விளைவுகள் குறித்தும் கலந்துரையாடுவதற்கும் கூடினர்.




*உரு14: : வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) முன்முயற்சிக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த இரண்டாவது நிபுணர் சந்திப்பு*

## *அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையம் (NAM S&T மையம்)*

அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையமானது (NAM S&T Centre> www.namstct.org), ஆகஸ்ட் 1989 முதல் இந்தியாவில் உள்ள அரசுகளுக்கு இடையேயான அமைப்பாக நிலவுகின்றது, என்பதுடன் இது விஞ்ஞானம் தொடர்பில் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் மிகவும் தீவிரமாக உள்ளது. இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய மற்றும் ஐரோப்பிய கண்டங்களில் பரவியுள்ள இந்த மையத்தின் மதிப்பிற்குரிய 47 உறுப்பு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இது ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் அணிசேராத விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் விஞ்ஞானவியல் நிறுவனங்களிடையே பரஸ்பர நன்மைகளினை பெரும் வகையில் கூட்டிணையும் சலுகையை வழங்குகிறது. தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, இலங்கைக்கான அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் மையப்புள்ளியாக செயல்படுகிறது.

இதுவரையில், அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையமானது, இலங்கையில் நடத்தப்பட்ட ஏழு சர்வதேச நிகழ்வுகள் உட்பட, பல்வேறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுமார் 91 சர்வதேச பட்டறைகள் மற்றும் 45 பயிற்சி வகுப்புகளை பல்வேறு வளரும் நாடுகளில் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வுகள் இலங்கையைச் சேர்ந்த பெருமளவிலான விஞ்ஞானிகள் உட்பட உலகெங்கிலும் உள்ள பெருமளவிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்களுக்குப் பயனளித்துள்ளன.

**அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 16வது ஆளும் குழுவின் கூட்டம்**

அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 16 வது ஆளும் குழுவின் கூட்டமானது (GC) 2023 ஜூலை மாதம் 27-28 ஆம் திகதிகளில் அன்று மொரீஷியஸ் அரசாங்கத்தின் கல்வி, மூன்றாம் நிலை கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் (MoETEST) நடத்தப்பட்டது. மொரீஷியஸின் நாட்டின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் விஞ்ஞான நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் மற்றும் சிரேட்ட அதிகாரிகள் உட்பட 12 நாடுகளைச் சேர்ந்த 44 பிரதிநிதிகள் மற்றும் அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மைய செயலகத்தின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முதல் நாள் அமர்வுக்கு பின்பு அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 16 வது ஆளும் குழுவின் செயற்பாட்டு மட்டத்திலான சந்திப்பானது, இலங்கையின் கல்வி அமைச்சின் செயலாளரும் மற்றும் அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 15வது ஆளும் குழுவின் தலைவருமான திரு. எம்.என். ரணசிங்க அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பங்கு பெருனர்களின் அறிமுகப்படுத்தலுடன் தொடங்கப்பட்டது. 16வது ஆளும் குழுவுக்கான புதிய நிர்வாகிகள் பின்வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: மொரீஷியஸ், உப தலைவர்கள்: எகிப்து, பாலஸ்தீனம், தென்னாப்பிரிக்கா. இந்த நிகழ்வில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆனைக்குழுவின் பதில் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஜனக எஸ். கீக்கியனகே அவர்களும் இணையம் மூலம் பங்குபற்றினர். 2021 பெப்ரவரி 24 அன்று நடைபெற்ற 15வது ஆளும் குழு (GC) கூட்டத்திலிருந்து மையத்தின் விஞ்ஞான ரீதியிலான செயல்பாடுகளை செயற்குழு மதிப்பாய்வு செய்து, முன்மொழியப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் விஞ்ஞான செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடியது.


Inauguration of 16th Governing Council (GC) Meeting of NAM S&T Centre, Mauritius, 27-28 July 2023

*உரு 15 : அணிசேரா மற்றும் பிறஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தின் 16வது ஆளும் குழு*

அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையமானது, விஞ்ஞானிகள் மற்றும் பிற அதிகாரிகளுக்கு மையத்தின் உறுப்பு நாடுகளால் ஏற்பாடு செய்யப்படும் பட்டறைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பிற குறுகிய கால மற்றும் நடுத்தர கால பயிற்சி திட்டங்களில் பங்கேற்க வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும் 2024 ஆம் ஆண்டில் பின்வரும் இலங்கை விஞ்ஞானிகளுக்கு அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மைய நிகழ்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது:

**1. அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இணைதல் - ஜே.எஸ்.எஸ். அஹேர், மைசூர். இந்திய துணைமை. 2022-23 ஆண்டுகள் தொடர்பில் விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருத்தல்**

i. சித்தாரா வினோதனி, எம்.பில் (கற்றுக் கொண்டிருத்தல்), மருந்தியல் மற்றும் மருந்தகவியல் விஞ்ஞான திணைக்களம் , இணை சுகாதார விஞ்ஞானவியல் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**2. ”பொருட்கள், வடிவமைப்பு, புத்தாக்கம் மற்றும் காலணி மற்றும் தோல் தயாரிப்புகளின் நுண்ணறிவு உற்பத்தி ஆகியவற்றில் வளர்ந்து வரும் போக்குகள்” என்ற தலைப்பில் சர்வதேச பயிற்சி பட்டறை - 2023 ஜனவரி 30 -31**

i. திரு. சுரேஷ் அலுவிஹார, ஆராய்ச்சியாளர், ஏற்றுமதி விவசாய திணைக்களம்

**3. ”நிலப்பரப்பு சூழலில் பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுதல்” பற்றிய சர்வதேச பட்டறை, 2023, மார்ச் 14-15**

i. பேராசிரியர் ஷெர்மிலா ஜயசேன, பேராசிரியர், உயிர்வேதியியல் மற்றும் மூலக்கூறு உயிரியல் துறை, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

ii. கலாநிதி கே. பகீரதன், தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர், விவசாய உயிரியல் திணைக்களம், விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**4. “உலகளாவிய மட்டத்தில் தெற்கு பகுதியில் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கை உருவாக்கம் - 2023“ பற்றிய சர்வதேச பயிற்சித் திட்டம், கோலாலம்பூர், மலேசியா, 2023, ஜுன் 6-8**

i. திருமதி எம்.எம்.எம்.ஜி.கே. மீகஹகொடுவ, பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), கல்வி அமைச்சு

**5. அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இணைதல் - ZMT ப்ரெமன் (ஜெர்மனி) வெப்பமண்டல கடலோர கடல் ஆராய்ச்சியில் நீல பொருளாதாரம்” – 2024 எனும் விடயத்தில் துணைமையாக இருத்தல்**

i. கலாநிதி டபிள்யூ. ஆராச்சிலேஜ் பானுகி நிரோஷா ஜயசூரிய, சிரேஷ்ட விரிவுரையாளர், மருந்தியல் மற்றும் மருந்தகவியல் திணைக்களம், இணை சுகாதார விஞ்ஞான பீடம், சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

ii. பேராசிரியர் அமில சந்தருவன் ரத்நாயக்க, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர்

**6. அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இணைதல் - ஜே.எஸ்.எஸ். அஹேர், மைசூர். இந்திய துணைமை -2024**

i. கலாநிதி கவினி லியனாராச்சி, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி

**7. அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையம் - “குறிப்பிட்ட இனம் சார்ந்த மருந்துகள் (Generic Drugs)” பற்றிய தனி வரைவு நூல் – அத்தியாயத்திற்கான பங்களிப்பு**

i. கலாநிதி ஏ. இல்முதீன் - சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடத்தின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனும் விடயத்துறை.

ii. திரு. பி. கல்கி, சிரேட்ட விரிவுரையாளர் GII, மருந்தியல் திணைக்களம், இணை சுகாதார விஞ்ஞான பீடம் (UAHS), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

iii. பேராசிரியர் சமிலா மெத்தானந்தா, மருந்தியல் பேராசிரியை மற்றும் பொது மருத்துவத்தில் நிபுணர், மருத்துவ பீடம், களனி பல்கலைக்கழகம்

**8. அணிசேரா மற்றும் பிற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இணைதல் – இயற்கை உற்பத்தி இரசாயனவியல், மருந்துகள் மற்றும் மருந்தகவியல் ஆகியவற்றில் ICCBS துணைமை – 2024**

விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்படல் தொடங்கப்பட்டிருத்தல்

# மனிதவள முகாமைத்துவம்

இலங்கை அரசாங்கத்திற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் கொள்கை உருவாக்கம் மற்றும் ஆலோசனை வழங்கும் குழு என்ற வகையில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணியை நிறைவேற்ற, தேவையான நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் ஒரு குழுவாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு செயற்பட்டு இதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, மற்றும் நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேலும் விருத்தி செய்தல் தொடர்பில் உயர் முயற்சி எடுக்கின்றது.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பின்படி, தலைவர் ஆணைக்குழுவின் தலைவராக செயல்படுகிறார். பணிப்பாளர், சிரேட்ட நிர்வாக அதிகாரி (CEO) என்ற வகையில் செயற்படுகிறார். மூத்த விஞ்ஞானிகள் மற்றும் விஞ்ஞானிகள், ஒவ்வொரு பிரிவிற்குமான கொள்கைகள், மூலோபாயத் திட்டங்கள் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பிற ஆவணங்களை உருவாக்கி தயாரிப்பதில் பங்குதாரர்கள் மற்றும் ஆலோசனை மன்றங்களுக்கு உதவுவதுடன் தமது ஒத்துழைபை வழங்குகிறார்கள். ஒரு பிரதி பணிப்பாளரின் வழிகாட்டுதலின் கீழ், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது தனது நிதி முகாமைத்துவத்தினை மேற்கொள்கிறது. மேற்கொள்ளப்படுகிறது. துணைப் பணியாளர்கள் எனும்போது அதற்குள், ஒரு நிர்வாக அதிகாரி, இரண்டு கூட்டிணை உதவியாளர்கள் (அதாவது திட்ட உதவியாளர்-நிதி மற்றும் தகவல், தொடர்பாடல் மற்றும் தரவுத்தள துணை பணியாளர்), ஐந்து முகாமைத்துவ உதவியாளர்கள், இரண்டு அலுவலக உதவியாளர்கள் மற்றும் மூன்று சாரதிகள் என்போர் அடங்குவர். குறிப்பிட்ட பணிகள் மற்றும் ஒப்படைப்புக்கள் தொடர்பில் ஆராய்ச்சி உதவியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஆகியோர்களது சேவையானது தேவையின் அடிப்படையில் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் வெளியிடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது.

### பதவி நிலை உத்தியோகத்தர்கர்கள் பற்றிய செய்திகள்

- தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் என்ற வகையில் திருமதி கீதானி கண்ணங்கர அவர்களினை ஆணைக்குழு 2023 நவம்பர் 14 அன்று அன்புடன் வரவேற்கிறது.

- தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் என்ற வகையில் 2022 மார்ச் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 2023 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி வரையில் பதில் பணிப்பாளராக கடமையாற்றிய திரு. ஜானக எஸ். கீக்கியனகே அவர்களால் ஆற்றப்பட்ட சேவைக்காக நாங்கள் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

- திரு. ஐ.பி.சி.யு. இளங்ககோன் 2023 டிசம்பர் 12 முதல் அலுவலக உதவியாளராக இணைந்தார்.

  ➢ **திறன் மேம்பாடு / அலுவலகத்திற்குள் மற்றும் அலுவலகத்திற்கு வெளியே பயிற்சி திட்டங்கள்**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் (SLIDA) 2023 செப்டெம்பர் 04 முதல் 08 வரை (05 நாட்கள்) நடாத்தப்பட்ட “பொதுத் துறையில் பொது நடத்தை மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள்” குறித்த செயலமர்வில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி லக்மினி உடுகம பங்கேற்றார்.

### நலன்புரி சங்கத்தின் செயற்பாடுகள்

வழமையான செயற்பாடு என்ற வகையில் 2023 ஆம் ஆண்டில், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்காக ஒவ்வொரு அலுவருக்கும் குறைந்த வட்டியில் ரூபாய் 50,000 கடன் வசதி வழங்கப்பட்டது.

## கூட்டுறவு ஆளுகை அறிக்கை

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைகுழுவினது (NASTEC) அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள், ஆகியன 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் கீழ், அதிமேதகு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏழு (07) உறுப்பினர்களை உள்ளடக்கிய தலைவர் மற்றும் ஆணைகுழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு ஒவ்வொரு மாதமும் கூடுகிறது.

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாராக நோக்கின் ஆணைகுழுவின் உள்ளடக்கமானது பின்வருமாறு இருந்தது.

பேராசிரியர் வெரஞ்ச கருணாரத்ன – தலைவர்

திருமதி தீபா லியனகே - ஆணைக்குழு உறுப்பினர்

கலாநிதி டி.எம். சுரதிஸ்ஸ திஸாநாயக்க - ஆணைக்குழு உறுப்பினர்

பேராசிரியர் டி.எஸ்.ஏ. விஜேசுந்தர - ஆணைக்குழு உறுப்பினர்

கலாநிதி கே.ஜி.ஐ. அமரசிங்க - ஆணைக்குழு உறுப்பினர்

கலாநிதி நிர்மலி டி சில்வா - ஆணைக்குழு உறுப்பினர்

திரு. துஷார வஜிர பெரேரா - ஆணைக்குழு உறுப்பினர்

திருமதி திலுபா பர்னாந்து - திறைசேரி பிரதிநிதி

கொள்கை தீர்மானங்களினை எடுப்பதற்காக ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டில் 11 கூட்டங்களை முன்னெடுத்தது.

i. ஈராண்டுக்கொரு முறையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாடு – IX இனது (BICOST -IX) தொழில்நுட்ப வெளியீடுகளுக்கான செயலாக்கத் திட்டம் (பரிந்துரைகள்).

ii. முக்கிய பங்குதாரர்களுடன் கலந்துரையாடி (NIA,NSF,UGC) உபகரண பகிர்வு கொள்கையை உருவாக்கல்.

iii. மீளாய்வு செயல்முறையை விரைவுபடுத்துதல் மற்றும் செயலாக்கங்களை எளிதாக்குதல் (செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு).

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது (AMC) ஒழுங்காக முறையில் அமைக்கப்பட்டது என்பதுடன் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் செயல்திறனுடன் தொடர்புடைய குறைபாடுகள் மற்றும் நிதி அம்சங்கள் மீதான கட்டுப்பாடு என்பனவற்றினை மேற்பார்வையிட வழக்கமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இது ஆணைக்குழுவிற்கு பொறுப்பு கூற வேண்டிய கடமையினை உடையதாகும்.

நிறுவனத்தின் செயல்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையில் திறமையாக மேற்பார்வை செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

கூட்டுறவு ஆளுகைக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான (SOEs) செயல்பாட்டுக் கையேடுகள் என்பனவற்றின் பிரகாரம், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது (AMC) ஆணைகுழுவினை சார்ந்த இருவரினை தனது உறுப்பினர்களாக கொண்டுள்ளது, என்பதுடன் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினது (AMC) தலைவராக பணியாற்றுகிறார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினது (AMC) குறைவெண் ஆனது அதன் உறுப்பினர்களில் ஒரு எளிய பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. மேலும், தேசிய கணக்காய்வு அலுவலகம்/வெளிப்புற கணக்காய்வாளர் மற்றும் நேர் அமைச்சின் தலைமை உள் கணக்காய்வாளர் ஆகியோர் கூட்டத்தில் அசதானிப்பாளர் என்ற வகையில் பங்குபற்றுவர்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறது அத்துடன் ஏற்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு ஏதுவாக, முந்தைய கூட்டம் பற்றிய குறிப்புக்களுடன் தனது பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கிறது. இந்த குழு 2023 ஆம் ஆண்டில் 04 கூட்டங்களை கூட்டியது.

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின்**
**2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**
(சகல தொகைகளும் இலங்கை ரூபாயில் தரப்பட்டுள்ளது)

| | குறிப்புக்கள் | 2023 | 2022 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடப்பல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் | 1 | 14,918,833 | 20,572,306 |
| புதவியணியினர் கடன்கள் - நீண்டகாலத் தவணை | 2 | 504,166 | 507,333 |
| | | **21,079,639** | **21,079,639** |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| பதவியணியினர் கடன்கள் - குறுந்தவணை | 3 | 274,000 | 248,000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 4 | 16,336 | 6,883 |
| இருப்பு நிலை / இறுதியிருப்பு | 5 | 86,757 | 153,345 |
| காசும் காசிற்கு சமமானவையும் | 6 | 2,959,572 | 1,381,089 |
| | | **3,336,665** | **1,789,317** |
| **மொத்த சொத்துக்கள்** | | **18,759,664** | **22,868,956** |
| **பரிப்புக்கள்** | | | |
| **நடப்பல்லாத பரிப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 7 | 758,012 | 758,012 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 8 | 4,960,405 | 4,524,786 |
| | | **5,718,417** | **5,282,798** |
| **நடப்புப் பரிப்புக்கள்** | | | |
| நிலுவை செலவினங்கள் | 9 | 4,111,346 | 1,416,791 |
| **மொத்த பரிப்புக்கள்** | | **9,829,763** | **6,699,589** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **8,929,901** | **16,169,367** |
| **தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு** | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | | 1,907,459 | 1,907,459 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | 26,259,,433 | 26,259,433 |
| ஒதுக்கீடுகள் | | (19,236,991) | (11,997,525) |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு** | | **8,929,901** | **(16,169,367)** |

01 மற்றும் 02 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் 07 – 11 ஆம் பக்கம் வரையில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் ஆகியன, இந்த நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதிகளாகும். இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன்னளிப்பிற்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பொறுப்பாகுவர். ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, கையொப்பமானது அவர்களின் சார்பாக இடப்பட்டுள்ளது.

தலைவர்

பதில் பணிப்பாளர்

பிரதி பணிப்பாளர்
நிதி மற்றும் நிர்வாகம்

ஆணைக்குழு உறுப்பினர்

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான**

(சகல தொகைகளும் இலங்கை ரூபாயில் தரப்பட்டுள்ளது)

| | குறிப்புக்கள் | 2023 | 2022 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீள்சுழற்சி மானியம் | | 23,358,225 | 20,179,000 |
| மூலதன மானியம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | 4,000,000 | 2,040,000 |
| BICOST - IX அனுசரணை உதவி | | 2,390,000 | - |
| மீண்டும் கூட்டுக- கொடுக்க வேண்டியவை | 10 | 498,533 | 6,897,700 |
| வருமானம் | 11 | 41,970 | 37,344 |
| | | **30,288,728** | **29,154,044** |
| **செலவினங்கள்** | | | |
| தனியார் வேதனாதிகள் | 12 | 12,555,903 | 10,389,312 |
| பிரயாணம் | 13 | 2,300 | 9,280 |
| விநியோகம் மற்றும் நுகர்வு | 14 | 606,566 | 225,271 |
| பராமரிப்பு | 15 | 671,764 | 455,349 |
| ஒப்பந்த சேவைகள் | 16 | 9,809,470 | 7,855,381 |
| மாற்றீடுகள் | 17 | 449,854 | 380,973 |
| செயற்றிறன் நிர்மாணம் | 18 | 356,870 | - |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 19 | 7,057,074 | 961,583 |
| கூட்ட செலவினங்கள் | 20 | 364,930 | 345,649 |
| பெறுமானத் தேய்வு மற்றம் கடன்தீர்வு செலவினங்கள் | 1 | 5,653,472 | 3,587,878 |
| **மொத்த செலவினங்கள்** | | **37,528,194** | **24,210,676** |
| **தொழிற்பாட்டு செலவினங்களின் மீதான மிகை / (நட்டம்)** | | **(7,239,466)** | **4,943,368** |
| **நிதியியற் கிரயம்** | | | |
| சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் விற்பனை மூலமான வருமானம் | | - | - |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை / (நட்டம்)** | | **(7,239,466)** | **4,943,368** |

*உரு16 : நிதிக்கூற்றுக்கள்*

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2023 மே 23
தலைவர்
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. **நிதிக்கூற்றுக்கள்**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuS) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில், கணக்க்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளினை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய தகவல்கள்

ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் ஏனைய தகவல்களாவன உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாததாக காட்டப்பட்ட இந்த ஏனைய தகவல்களாவன, இக்கணக்ககாய்வு அறிக்கைக்குரிய திகதிக்கு பின்பே எனக்கு வெளிப்படுத்தப்பட்டது இதற்கு முகாமைத்துவமே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் பற்றி வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் இத் தகவல்கள் தொடர்பில் எதுவித உத்தரவாதமோ அல்லது அபிப்பிராயமோ என்னால் தர முடியாது.

நிதியியல் கூற்றுக்களினை பொறுத்த வரையில் எனது பொறுப்பானது, ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் போது அவற்றினை வாசித்தலாகும். அவ்வாறு வாசிக்கும் போது எனது அறிவுக்கு எட்டிய வரையில் கணக்காய்வின் போது அல்லது வேறு ஏதேனும் வகையில் நிதிக்கூற்றுக்களில் காணப்படக்கூடிய இணங்காமையினை கவனத்தில் கொள்தலாகும்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்ற மற்ற தகவலும் நான் செய்த பணியும் குறிப்பிடத்தக்க அளவு பொருண்மையான பிறழ் கூற்றுக்களினை கொண்டிருப்பதாக நான் தீர்மானித்தால், அந்த

உண்மையை வெளிப்படுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். எனினும் இங்கு அவ்வாறு தெரிவிக்க எதுவும் தெரிவிக்கவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 12 (அ) வினது தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் மன்றத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I) (D) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I) (D) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு கீழே குறிப்பிடப்படுகின்ற எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(D) தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆளுனர் சபை உறுப்பினர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம், மன்றத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையதாலான எழுத்திலான சட்டம் அல்லது நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுகாது மன்றம் செயற்பட்டுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு சட்டம் எண். 19 இல் பிரிவு 12(E) இல் உள்ள தேவையின்படி பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **விதிகள்,ஒழுங்கு விதிகள் மற்றும் வழி காட்டல்களுடன் தொடர்புற்ற வகையில்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| நிதி அமைச்சின் பொது வியாபார முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டதும் அரசிற்கு சொந்தமான வியாபார முயற்சிகள் பற்றியதும் 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியினையும் 2021/01 எனும் இலக்கத்தினையும் கொண்ட தொழிற்பாட்டு கைந்நூலின் பிரிவு 6.6 | நிதியாண்டு ஆரம்பமாகி 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்று இருந்த போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12(G) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைபாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளது

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (H) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஆணைக்குழுவின் வளங்கள் காலவரைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தியிருக்கவில்லை எனவும்

**2.3 ஏனைய விடயங்கள்**

2023 ஆம் ஆண்டிற்கான தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்திட்டம் மற்றும் முன்னேற்றத்தின்படி, வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ள 06 பிரதான நடவடிக்கைகளுக்காக ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மதிப்பாய்வு வருடத்தில் கீழ் வருடத்தின் இறுதியில் செலவிடப்பட்ட உண்மையான பெறுமதி 4 மில்லியன் ரூபாவாகும். மொத்தமாக நோக்கின் குறைந்தபட்சம் 20 சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும். இதற்காக ரூ. 1.2 மில்லியன் ஒதுக்கப்பட்டது, ஆனால் கணக்காய்வு திகதிக்குள் 30 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. எனவே, மனிதவள மேம்பாட்டுக்கு நிதி போதுமானதாக இல்லை.

டபிள்யு..பி.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**2.2.2**

2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது 2024 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதியன்றும் மற்றும் 2022 ஆண்டு அறிக்கையானது 2024 ஏப்ரல் மாதம் 19 திகதியன்றும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**2.3 ஏனைய விடயங்கள்**

2023 ஆம் ஆண்டின் செயல்திட்டத்தின்படி, நிதி முன்னேற்றம் கிட்டத்தட்ட 20% இருந்தபோதிலும், 2023 டிசம்பர் 31 இல் பௌதீகவியல் முன்னேற்றம் கிட்டத்தட்ட 80% இல் தக்கவைக்கப்படலாம்.

எதிர்பார்த்த நிதி முன்னேற்றத்தை அடையத் தவறியமைக்கு பின்வரும் காரணிகள் எதுவாகும்.

i. அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட 3/2022 மற்றும் 9/2022 வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தின் அனைத்து முக்கிய செயல்பாடுகளும் செயல்படுத்தப்பட வேண்டியிருந்தது, அதன்படி, அந்த நடவடிக்கைகளின் வழிமுறை மாற்றப்பட்டது.

   இந்த சுற்றறிக்கைகளின்படி, பெரும்பாலான நிகழ்ச்சிகள் நிகழ்நிலை ஊடாக முறையில் நடத்தப்பட்டன. இதனால், மதிப்பிடப்பட்ட வருகைப் படிகள், கூட்டச் செலவுகள், மண்டபக் கட்டணம், போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றைச் சேமிக்க இயலும். மேலும், நிறுவனத்தின் வெளியீடு மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகள் ஆகியன பெரும்பாலும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டதால், அத்தகைய நடவடிக்கைகளுக்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் சேமிக்கப்பட்டன.

ii. 2023 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கை உருவாக்கும் நடவடிக்கைகள் துறைசார் நிபுணர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் மேலும் மேற்கூறிய செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கைகளின்படி கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்பட்டதால், திட்டமிட்டபடி பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.

iii. 2023 ஆம் ஆண்டு தொடர்பான நிறுவன மறுஆய்வுச் செயல்பாட்டில், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் வழங்கிய காலக்கெடுவிற்குள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தகவல்களை வழங்கத் தவறியதாலும், நிபுணர் குழு உறுப்பினர்களின் வேலைப்பளுவாலும், மறுஆய்வுப் பணி தாமதமானது, இதனால் ஒதுக்கப்பட்ட நிதி அப்படியே இருந்தது.

   அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட 01/2023 (B) சுற்றறிக்கையின்படியும் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படியும் அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புகள் மற்றும் அத்தியாவசியப் பயிற்சிகள் மட்டுமே வழங்கப்பட்டன.

ஜி.எஸ். கன்னங்கர
பதில் கடமையாற்றல் பணிப்பாளர் / சிரேட்ட நிறைவேற்று அதிகாரி


## கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் (2014-2023)

அட்டவணை 01. **கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள்** (2014-2023)

| வருடம் | நிதி தகவல்கள் (ரூ. மில்லியனில்) | | |
|---|---|---|---|
| | பெறப்பட்ட நிதி | செலவுகள் | Expenditure |
| 2014 | 37.00 | 27.84 | 27.93 |
| 2015 | 36.60 | 22.52 | 22.20 |
| 2016 | 36.00 | 32.16 | 33.50 |
| 2017 | 43.75 | 30.10 | 34.40 |
| 2018 | 45.00 | 43.20 | 38.96 |
| 2019 | 40.80 | 30.47 | 35.93 |
| 2020 | 35.10 | 26.36 | 28.91 |
| 2021 | 51.00 | 21.15 | 24.89 |
| 2022 | 49.00 | 22.22 | 20.62 |
| 2023 | 57.47 | 29.75 | 31.87 |

அட்டவணை 01. **கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள்** (2014-2023)

உரு 17 ஆனது கடந்த 10 ஆண்டுகளின் நிதி நிலையினை ஒதுக்கீடுகள் மற்றும் பெறப்பட்ட நிதிகளுக்கு இடையிலான சதவீதமாகவும், பெறப்பட்ட நிதிகளுக்கும் செலவுகளுக்கும் இடையிலான சதவீதமாகவும் காட்டுகிறது




உரு 17 : **கடந்த 10 ஆண்டுகளில் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள்** (2014-2023)